## <u>இணைப்பு 1</u>

அரசாணை (நிலை) எண் 113, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச1) துறை, நாள் 20.5.2008 மூலம் அரசு அறிவித்துள்ள கடன் தள்ளுபடி சலுகை திட்டம் குறித்து தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மற்றும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள்

---

1) பிரதம சங்கங்கள் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளியோர்களுக்கு ரூ.25,000/– வரை கீழ்க்காணும் திட்டங்களின் மூலம் கடன் வழங்கப்பட்டு அவர்களால் திருப்பிச் செலுத்த இயலாமல், நிலுவையில் உள்ள கடன் தொகை முழுவதும் ரத்து செய்யப்படும் :–

   அ) பொது திட்டம் மற்றும் 1 முதல் 16 வரை உள்ள பொருளதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கான திட்டங்கள் (Economically Weaker Section)

   ஆ) நகர்ப்புற பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கான திட்டம் (Urban Economically Weaker Section)

   இ) நேரு ரோஜ்கார் யோஜனா திட்டம் (NRY)

   ஈ) பீடித் தொழிலாளர் திட்டம்

   உ) வெள்ளத் திட்டம்

   ஊ) சுப்ரா திட்டம்

   எ) சமத்துவப்புர திட்டம்

   ஏ) வாம்பே திட்டங்கள்

2) மேற்படி சலுகைத் தொகையை மீளப் பெறுவதற்கு, பிரதம சங்கங்கள் திட்ட வாரியாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தொகை, வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் தள்ளுபடி சலுகை விவரங்களை இத்துடன் இணைப்பு–2ல் தெரிவிக்கப்பட்டுள்ள படிவத்தில் தயாரித்து செயலாளர், மேற்பார்வை கூட்டுறவு சார்பதிவாளர், சங்க தனி அலுவலர் மற்றும் மண்டல துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் மேலோப்பம் பெற்று தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு அனுப்பிவைக்கவும், அதன் நகலை வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பவும் வேண்டும்.

3) ரூ.25,000/–க்கு மேல் ரூ.1.00 இலட்சம் வரை கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ள பயனாளிகள் 31.03.2008ல் தவணை தவறிய அசல் தொகை மற்றும் 50 விழுக்காடு

வட்டிதொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியில் 50 விழுக்காடும் அபராத வட்டி முழுமையாகவும் தள்ளுபடி செய்யப்படும்.

உதாரணம் : 31.3.2008ல் உறுப்பினர் செலுத்த வேண்டிய தவணை பாக்கி கீழ்க்கண்டவாறு உள்ளது எனில்

| வ. எண் | விபரம் | தவணை தவறிய அசல் | தவணை தவறிய வட்டி | அபராத வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1) | உறுப்பினரது தவணை பாக்கி | 41,200 | 27,300 | 8,800 | 77,300 |
| 2) | உறுப்பினர் திட்டத்தின் கீழ் செலுத்தும் தொகை | 41,200 | 13,650 (50%) | -- | 54,850 |
| 3) | தள்ளுபடி மூலம் உறுப்பினருக்கு கிடைக்கும் சலுகைத் தொகை | -- | 13,650 (50%) | 8,800 | 22,450 |

4) ரூ.1,00,000/-க்கு மேல் ரூ.2,00,000/- வரை கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ள பயனாளிகள் 31.3.2008ல் தவணை தவறிய அசல் தொகை மற்றும் 75 விழுக்காடு வட்டித் தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியில் 25 விழுக்காடும், அபராத வட்டி முழுமையாகவும் தள்ளுபடி செய்யப்படும்

உதாரணம் : 31.3.2008ல் உறுப்பினர் செலுத்த வேண்டிய தவணை பாக்கி கீழ்க்கண்டவாறு உள்ளது எனில்

| வ. எண் | விபரம் | தவணை தவறிய அசல் ரூ. | தவணை தவறிய வட்டி ரூ. | அபராத வட்டி ரூ | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1) | உறுப்பினரது தவணை பாக்கி | 1,34,400 | 71,600 | 21,600 | 2,27,600 |
| 2) | உறுப்பினர் திட்டத்தின் கீழ் செலுத்தும் தொகை | 1,34,400 | 53,700 (75%) | -- | 1,88,100 |
| 3) | தள்ளுபடி மூலம் உறுப்பினருக்கு கிடைக்கும் சலுகைத் தொகை | -- | 17,900 (25%) | 21,600 | 39,500 |

5) ரூ.2,00,000/-க்கு மேல் ரூ.7,00,000/- வரை கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் உள்ள பயனாளிகள் 31.3.2008ல் தவணை தவறிய அசல் தொகை மற்றும் 90 விழுக்காடு வட்டித் தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய வட்டியில் 10 விழுக்காடும், அபராத வட்டி முழுமையாகவும் தள்ளுபடி செய்யப்படும்.

உதாரணம் : 31.3.2008ல் உறுப்பினர் செலுத்த வேண்டிய தவணை பாக்கி கீழ்க்கண்டவாறு உள்ளது எனில்

| வ. எண் | விபரம் | தவணை தவறிய அசல் ரூ. | தவணை தவறிய வட்டி ரூ. | அபராத வட்டி ரூ | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1) | உறுப்பினரது தவணை பாக்கி | 6,48,600 | 1,64,500 | 33,900 | 8,47,000 |
| 2) | உறுப்பினர் திட்டத்தின் கீழ் செலுத்தும் தொகை | 6,48,600 | 1,48,050 (90%) | -- | 7,96,650 |
| 3) | தள்ளுபடி மூலம் உறுப்பினருக்கு கிடைக்கும் சலுகைத் தொகை | -- | 16,450 (10%) | 33,900 | 50,350 |

6) மேற்படி அரசு அறிவித்த சலுகையானது தாவா மற்றும் தீர்ப்பாணை பெற்று நிறைவேற்று நடவடிக்கையில் உள்ள தவணை தவறிய அங்கதினர்களுக்கும் பொருந்தும், தாவா மற்றும் தீர்ப்பாணை பெறப்பட்ட இனங்களுக்கு டிகிரி செய்யப்படாமல் இருந்தால் என்ன நிலை இருக்குமோ அந்த நிலைக்கு எடுத்துச் சென்று தவணை தவறிய நிலுவை, வட்டி, அபராத வட்டி என கணக்கிட்டு அவர்களுக்கு தள்ளுபடி வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

7) 31.3.2008ல் தவணை தவறிய தொகையை இத்திட்டத்தின்படி 1.4.2008லிருந்து 30.9.2008க்குள் மொத்தமாகவோ அல்லது தவணைகளிலோ செலுத்த வேண்டிய தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தும் உறுப்பினர்களுக்கும் தள்ளுபடி சலுகை வழங்கப்பட வேண்டும். இச்சலுகையைப் பெற விரும்பும் பயனாளிகள் 1.4.2008க்கு பிறகு செலுத்த வேண்டிய தவணைத் தொகையையும் செலுத்த வேண்டும்

8) 31.3.2008ல் நிலுவையில் உள்ள தவணை தவறிய அசலுக்கு 1.4.2008 முதல் 30.0.2008க்குள் இச்சலுகைத் திட்டத்தின் அடிப்படையில் செலுத்தும் அசலுக்கு அபராத வட்டி வசூலிக்கக்கூடாது. சாதாரண வட்டி மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும்.

9) இச்சலுகையினை 30.9.2008க்குள் உறுப்பினர்கள் முழுமையாக பயன்படுத்தாமல் இருப்பார்களேயானால் 31.3.2008ல் இருந்த நிலைக்கே கொண்டு சென்று வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவுத் தொகைகளைக் கணக்கிட்டு 1.10.2008லிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

10) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், இணைய அளவில் பராமரித்து வரும் பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுபபினர்களின் தனி நபர் கடன்களுக்கான கடன் நிலுவை

விவரங்களை 31.3.2008ல் உள்ளவாறு அனைத்து பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கும் அசல், வட்டி, அபராத வட்டி விவரங்களுடன் தொடர்புகொள்ள வேண்டும். பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் தனி நபர் கடன்களுக்கான விவரங்களை இணையத்துடன் ஒத்திசைவு செய்து சரிபார்த்துக்கொள்ள வேண்டும். 1.4.2008 முதல் வசூலிக்கப்படும் தொகையினை பிரதம சங்கங்கள் இணையத்தில் அந்தந்த தனி நபர் கணக்குகளில் உரியவாறு செலுத்திட வேண்டும்.

11) போலி மற்றும் பினாமி கடன்கள் என சட்டப்பூர்வ நடவடிக்கைகளின் மூலமோ இதர வகையிலோ கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ள கடன்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.

12) அடமானக் கடன்களைப் பொறுத்த வரையில் வீடுகட்டுவதற்காகவும், வீடு பழுது பார்ப்பதற்காகவும், வீட்டினை விரிவாக்கம் செய்வதற்காகவும் கடன் வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே இக்கடன் சலுகைத் திட்டம் பொருந்தும்.

13) பிரதம சங்கங்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்து வழங்கியுள்ள மேற்கூறப்பட்ட கடன்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

14) பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் தவணை தவறிய அங்கதினர்களின் சொத்துக்களைக் கையகப்படுத்தி விற்பனை சான்றிதழ் பெற்றிருந்தாலும் அக்கடன்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

15) வீட்டுமனை மட்டும் வாங்குவதற்கும், வணிக வளாகங்கள் கட்டுவதற்கும் வழங்கப்பட்டுள்ள கடன்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.

16) இதற்கு முன் அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி திட்டங்களில் பயன்பெறாத உறுபபினர்களுக்கும் இச்சலுகைத் திட்டம் பொருந்தும்.

17) 31.3.2008 வரையில் கடனை முழுமையாகச் செலுத்தி கடனைத் தீர்த்த உறுப்பினர்களுக்கு இச்சலுகைத் திட்டம் பொருந்தாது.

18) இத்திட்டத்தின் விவரங்களை அனைத்து உறுப்பினர்களும் அறியும் வண்ணம் உரிய வகையில் விளம்பரப்படுத்த வேண்டும்.

19) இத்தள்ளுபடி சலுகைத் திட்டம் தொடர்பான ஒவ்வொரு சனிக்கிழமையுடன் முடிவடையும் வாராந்திர முன்னேற்றம் குறித்தான அறிக்கையினை திட்டம் வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் இணைப்பு–3ல் தெரிவிக்கப்பட்டுள்ள படிவத்தில் தொகுத்து பிரதி வாரம் திங்கட்கிழமை அன்று பதிவாளர் (வீட்டுவசதி) மற்றும் இணையத் தனி அலுவலர்

ஆகியோருக்கு நேர்முக கடிதம் முலமாக அனைத்து மண்டல துணைப்பதிவாளர் (வீட்டுவசதி)களும் அனுப்பி வைக்க வேண்டும். சங்கம் வாரியான விவரங்கள் துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகத்தில் பராமரிக்கப்பட வேண்டும்.

20) இந்த கடன் திட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க ஒவ்வொரு வட்ட அளவிலும், அவ்வட்டம் சார்ந்த கூட்டுறவு சார் பதிவாளர், மேற்பார்வை கூட்டுறவு சார் பதிவாளர், இணைய அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றைத் துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) தலைமையில் அமைத்து, வட்டிச் சலுகை பெரும் உறுப்பினர்களின் கடன் விவரங்களை ஒத்திசைவு செய்து துணைப்பதிவாளர்(வீட்டுவசதி)யின் மேலோப்பத்துடன் இணையத்திற்கு அனுப்பி பதிவாளர் (வீட்டுவசதி)க்கு நகலை அனுப்ப வேண்டும்.

அரங்க. செல்லமுத்து
அரசு செயலாளர்

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.